# சுட்டி

• மாத இதழ் • ஜூலை'84

50 காசு




FREE E- BOOKS , www.thamizham.net.,




FREE E- BOOKS , www.thamizham.net.,

இதோ ஒரு புதிய மாத இதழ்!

# அன்னம் விடு தூது

ஆகஸ்ட் 1984 முதல் பூரண
மாத இதழாக இலக்கியப் பயணம்

சிறப்பாசிரியர்: **அப்துல் ரகுமான்**

ஆசிரியர்: **சிற்பி**

பொறுப்பாசிரியர்: **சுசீலா**

**முதல் இதழ் எழுத்தாளர்கள்...**

கி. ராஜநாராயணன், சுஜாதா, சிற்பி, பிரபஞ்சன், மு. மேத்தா, மீ. மனோகரன், அப்துல் ரகுமான், பா. ஜெயப்பிரகாசம், இந்திரன், கந்தர்வன், ஜெயந்தன்

பாலா

தனி இதழ் விலை ரூ 1.50 | ஆண்டுச் சந்தா ரூ 16.00

*விளம்பரதாரர்களும், தகுந்த விற்பனைக் கழிவுடன் பத்திரிகை விற்பனை செய்ய ஆர்வமுள்ள ஏஜெண்டுகளும் அணுகுக:*

தொடர்பு கொள்ள:

அன்னம் விடு தூது
சிவன்கோயில் தெற்குத் தெரு
சிவகங்கை - 623 560

FREE E- BOOKS , www.thamizham.net.,

இந்தியா நேற்று இன்று நாளை 10

## நமது போராட்டங்கள்

விரக்தியையும், வெறுப்பையும் ஒவ்வொரு புரட்சியும் விளைவிப்பது வழக்கமாகியுள்ளது. ஒவ்வொரு புதிய ஆட்சியும் பழைய ஆட்சியின் தவறுகளை நியாயப்படுத்துகின்றன.

மாமியார் உடைத்தால் மண்குடம். மருமகள் உடைத்தால் பொன் குடம் என்ற மனப் போக்கிலேயே புரட்சிகள் செயல்படுகின்றன.

இதுவரை நடந்தேறியுள்ள பொதுவுடமைப் புரட்சிகளும் இதற்கு விதிவிலக்கல்ல. இதுவே துயரமான உண்மையாகும்.

மக்களுடைய தேவைகளும் கோரிக்கைகளும் மாறிக் கொண்டேயுள்ளன. புரட்சியின் போது முன் வைத்த கோரிக்கைகள் புரட்சிக்குப்பின் பழையதாகி விடுகின்றன.

அரசியல் தலைமையோ அதை உணர்வதில்லை. அரசியல் தலைமைக்கும், மக்களுடைய உணர்ச்சிகளுக்கும். இடையே எப்போதும் பெரும் இடைவெளி இருந்து வருகிறது.

சமூகத் தேவைகள் காலங்கடந்தே நீதியாகவும், சட்டங்களாகவும் பரிணமிக்கின்றன.

இந்த இடைவெளியைக் குறைப்பதே,

அதாவது சமுதாயத்தின் தேவைகளை உடனடியாகப் பிரதிபலிக்கக் கூடிய அரசியல், சமுதாய நிறுவனங்களை உருவாக்குவதே புரட்சிகளின் நோக்கமாக இருந்துள்ளது.

இதுவே அரசு உலர்ந்து உதிரும் என்பதன் உள்ளடக்கம். ஆனால் விளைவு முழுமையாக இருப்பது இல்லை.

இதில் புதிய தலைமுறைகள் போதிய அக்கறை காட்டுவதில்லை. இந்த இடைவெளி சகிக்க முடியாததாக மாறும் வரை எந்த மாற்றமும் நடைபெறுவதில்லை.

இந்த அக்கறை இல்லாமை என்பது ஒரு சமூக நோயாகும்.

ஒரு இயக்கம் அரசாங்கத்தை எதிர்ப்பதன் மூலம் மக்களின் செயலின்மையையே எதிர்த்து போராடுகிறது.

→

FREE E- BOOKS , www.thamizham.net.,

மக்கள் தொகையில் 70% பேர் அரசாங்கத்தைப் புறக்கணித்து, வேலை செய்யாமல், தொழிற்சாலையில் இருந்து போக்குவரத்து வரை ஸ்தம்பிக்க வைத்து விடுவார்களானால், அந்த நாட்டின் இராணுவத்தில் மக்களுக்கு எதிராகத் துப்பாக்கியைச் சுடுபவர்களின் எண்ணிக்கை சில நூறாகவே இருக்கும்.

ஆனால் அது அந்நிய நாட்டு இராணுவமாக இல்லாதிருக்க வேண்டும்.

நடைமுறையில் காண்பது என்ன?

மக்களில் பெரும் பகுதியினர் புரியாதவர்களாக, அக்கறை இல்லாதவர்களாக, நம்பிக்கை இல்லாதவர்களாக இருக்கிறார்கள்.

சிறு பகுதியினரே தியாகங்களுக்கும், வெற்றிகளுக்கும் முன் நிற்கிறார்கள்.

பெரும்பான்மையினர் பகிர்ந்து கொள்ள வேண்டிய தியாகங்களையும், பொறுப்புகளையும் சிறு பகுதியினர் சுமக்கும்படியாகிறது.

மக்களிடம் உள்ள அக்கறையின்மை, செயலின்மை, பெரும்பான்மையினர் ஒதுங்கியிருத்தல்—இங்கிருந்தே நமது போராட்டம் ஆரம்பிக்கிறது.

எதிர்காலத்தில் நமது போராட்டம் என்பது மக்களைப் பயிற்றுவித்தல் என்பதே.

தொழிற்சங்கம் முதல் பார்லிமெண்டு நடவடிக்கை வரை →

**இப்படியும் ஒரு வணிகர்—:** ஒரிசா மாநிலத்திலுள்ள ரூர்கேலா என்ற ஊரில் வணிகர் ஒருவர் ஒரு உயர்நிலைப் பள்ளியின் அருகில் கடை வைத்திருக்கிறார். அந்த சுற்றுப்புறத்தில் இவர் கடையைத் தவிர வேறு கடைகள் அதிகம் இல்லை. இந்தக் கடைக்காரரிடம் சிகரெட்டு மட்டும் கிடைக்காது. பக்கத்தில் தான் கடைகள் இல்லையே. வாங்கி வைத்தால நன்றாக விற்பனையாகுமே என்று கேட்பவர்களிடம் இவர் கூறுகிறார், "இங்குள்ள விடுதியில் 200 மாணவர்கள் தங்கிப் படிக்கின்றனர். அவர்கள் இங்கு வந்து புகைப்பிடித்துக் கெட்டுப் போகக் கூடாதே என்பதால் தான் நான் வாங்கி வைக்கவில்லை." **நன்றி: ஏணி**


FREE E- BOOKS , www.thamizham.net.,

சில எதிர்கட்சியினர் இயன்ற பங்கைச்செய்து வருகின்றனர். ஆனால் மக்களைப் பயிற்றுவித்தல் என்ற முக்கியமான அம்சத்தில் அவை செயலற்றுள்ளன. ஒவ்வொரு கட்சியின் பிரச்சாரத்தையும் பார்த்தால் இது நன்கு புரியும்.

பல கட்சிகளிடம் மக்களைப் பயிற்றுவிப்பதற்கான சரக்கு இல்லை. சில கட்சிகளிடம் சரக்கு கொள்முதல் சரி யாக இல்லை.

எனவே, உலகத்தில் உள்ள ஒவ்வொரு கொள்கையின் அடிப்படையிலும் இந்தியாவில் கட்சிகள் இருந்த போதும், மக்களைப் பயிற்றுவித்தல் என்ற அம்சத்தில் அவை சூன்ய மாக இருப்பதால்,

புதிய கட்சியின் தேவை மிகக் கடுமையாகியுள்ளது.



சுருக்கமாகச் சொன்னால் நமது போராட்டத்தின் முதல் கட்டம் மக்களிடமே. அவர்களுடைய அலட்சியமும் நம்பிக்கை இன்மையுமே நமது எதிரிகள்.

மக்களை உணர்ச்சிப் பிண்டங்களாக்குவதல்ல நமது வேலை. அவர்களைப் பொறுப்புடையோராக, பொறுப்பு களைப் பகிர்ந்து கொள்ளக் கூடியவர்களாக்குவதே நமது உடனேடி வேலை.

இந்திய மக்கள் முடிந்த அளவு உடல் உழைப்பையும், ஊதியங்களில் சிறு பகுதியையும் இந்நாட்டின் அரசியல் சமுதாய முன்னேற்றத்துக்காக வழங்க முன் வருமாறு செய் வதே நமது போராட்டத்தின் முதல் குறிக்கோளாகும். □

கடந்த 10 மாதங்களாக இத்தொடரில் வெளிவந்த கட்டுரைகளின் எதிரொலியை வாசகர்களிடமிருந்து நோக்கு கிறோம். இச்சிந்தனையை மறுபரிசீலனை செய்யவோ, விரிவுபடுத்தவோ உங்கள் விமர்சனங்கள் உதவட்டும்.

—ஆசிரியர் குழு

FREE E- BOOKS , www.thamizham.net.,

# ஐஸ் கிரீம்

ஐஸ்கிரீம் கோடைக்காலத்தில் அனைவரையும் கவர்ந்திழுக்கும் ஓர் உணவுப் பொருள். 13ம் நூற்றாண்டில் சீன மக்கள் தான் பனிக்குழம்பு எனப்படும் இந்த ஐஸ்கிரீமைக் கண்டுபிடித்தனர். சீன மன்னர்களாலும் மேட்டுக்குடியினராலும் மட்டுமே பயன்படுத்தப்பட்ட இந்தப் பனிக்குழம்பை எளிய மக்களும் நடுத்தர மக்களும் தயாரிககவும், உண்ணவும் கூடாதென 'குப்ளகான்' என்றோர் மன்னன் தடைப்படுத்தியும் இருந்திருக்கின்றான். இரு நூற்றாண்டுகளுக்குப் பின் வெளிநாட்டிலிருந்து சீனாவுக்கு வந்த மார்க்கோபோலோ தான் ஐரோப்பாவிற்குப் பனிக்குழம்பு செய்யும் முறையை அறிமுகப்படுத்தினார். அமெரிக்கா நியூயார்க்குச் செய்தி ஏடு ஒன்றில் இதுபற்றிய விவரம் வெளிவந்த பின்பே உலகெங்கும் இது உண்ணும் பொருளாகப் பரவியது.

ஐஸ்கிரீமில் பாலைவிட அதிகமாக வைட்டமின் A, B1. B2 ஆகிய சத்துககள் உள்ளன. ஐஸ்கிரீமில் 63.2% நீர், 10 6% கொழுப்புச்சத்து, 4.5% புரதச்சத்து, 14.2% சர்க்கரை உள்ளன. முதல் தரமான விலையுயர்ந்த ஐஸ்கிரீம்களில அதிக அளவு கொழுப்புச்சத்து உள்ளது. வளரும் நாடுகளில் பால் கொழுப்பிற்கு பதிலாக தாவரக் கொழுப்பைச் சேர்த்து ஐஸ்கிரீம் தயாரிககப்படுகின்றது. இதற்கு மெலோரின் என்று பெயர்.

குழந்தைகளுக்கு ஐஸ்கிரீம் கொடுக்கலாம். ஐஸ்கிரீம் சாப்பிடும் எல்லோருக்கும் இருமல், சளி, தொண்டைக்கட்டு ஏற்படுவதில்லை. ஆனால் காய்ச்சி வடிக்கப்பட்ட நீரைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படாத எல்லா ஐஸ்கிரீம்களுமே உடலுக்குத் தீங்கானவை. ஏனெனில் அசுத்த நீரில் தயாரிக்கப்படும் ஐஸ்கிரீம்களில் மஞ்சள்காமாலை. டைபாய்டு நோய்க்கிருமிகள் மிக மிக ஆரோக்கியமாக வளர்வதுடன் இனப்பெருக்கமும் விரைவாகச் செய்கின்றன.

—ரேவதி

FREE E- BOOKS , www.thamizham.net.,

# லாட்டரியா? / மோசடியா?

இந்தியாவிலே அதிக அளவில் பரிசுச் சீட்டு விற்பனையாகும் மாநிலம் தமிழகம் தான். பகுத்தறிவு பகலவனாம் பெரியாரின் வழியில் நடக்கும் அண்ணாவின் அரசு இப்போது 20 சதவீதம் வரியை செலுத்தி விட்டு, யார் வேண்டுமானாலும் தமிழகத்தில் கொள்ளையடிக்கலாம் என்று ஆசி வழங்கியுள்ளது. அங்கிங்கெனாதபடி தமிழ் நாட்டின சந்துபொந்துகள்'லெல்லாம் மதுவைப்போல் லாட்டரியும் விற்பனையாகிறது. அரசு,மக்கள் நலவாழ்வுத் திட்டங்களை நிறைவேற்றவும் இல்லை இனி நிறைவேற்றப் போவதும் இல்லை என்ற நிலையில் மக்கள் தாங்கள் வாழ வேண்டும் என்றால் ஒரே வழி லாட்டரியில் பரிசு கிடைப்பதுதான் என்ற முடிவோடு - முனைப்போடு லாட்டரியை வாங்குவதினால் லாட்டரி விற்பனையில் தமிழ்நாடு கொடி கட்டிப்பறக்கிறது.

குலுக்கல் முடிவுகளை தமிழ் தினசரிகள் தங்கள் விருப்பம் போல வெளியிடுகிறது. அச்சு எழுத்தும், மையும் காகிதமும் கிடைத்து விட்டதால் மட்டுமே பத்திரிகை நடத்தும் தினசரிகளில் முடிவுகளைப் பார்ப்பதாலும், இப்படிப்பட்ட தினசரிகளில் முடிவுகளை வெளியிடுவதாலும் அரசுக்கு அதிக லாபம் கிடைக்கிறது. இதை லாபம் என்பதைவிட மோசடி என்று கூறுவதே சிறந்தது. காலையில் பத்திரிகை ஒரு எண்ணுக்கு பரிசு என அறிவிக்கும், ஏனைய சீட்டுகளை கிழித்துவிட்டு பரிசு பெற்ற எண்ணுள்ள சீட்டை பணமாக்க அனுப்பினால் நாலு நாள் கழித்து திருத்தம் வெளியிட்டு கிழித்தெறிந்த சீட்டுக்கு பரிசு உண்டு என அறிவிக்கின்றனர். வரிசை மாற்றம் எண்கள் மாறுதல் ஆகியவற்றைச்செய்யும் இயக்குனரகங்கள் "வருந்துகிறோம்" என்றும் தினசரிகள் தவறுக்கான பழியை அச்சு எந்திரத்தின் மேலும் போட்டு விட்டு தப்பிவிடுகின்றன. இடையில் சிக்கித்திணறுவது பாமர மக்கள் தான். இதனால் சில சீட்டுகள் நீதிமன்றத்தில் உள்ளன. இறுதி முடிவுகளை அரசு கெசட்டில் சரிபார்க்க

→

FREE E- BOOKS , www.thamizham.net.,

வேண்டும். அரசு கெசட்தான் இறுதி முடிவு எனில் இடைக்கால முடிவினை ஏன் பத்திரிகைகளில் வெளியிட வேண்டும்? பூடான் அரசின் கெசட் தமிழகத்தின் சந்து பொந்துகளில் கிடைக்கிறது?

முடிவுகளை வெளியிடுவதால் ஏற்படும் தவறுகளால் அப்பாவி மக்களுக்குச் சேர வேண்டிய கோடிக்கணக்கான பணம் அரசு கருவூலத்தில் தூங்குகிறது. இது அப்பட்டமான மோசடி இல்லையா?

மத்திய பிரதேச மாநில நர்மதா லாட்டரியில் 7-வது பரிசு ரூ 5 வீதம் 60,000 உண்டு என்று சீட்டில் ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டுள்ளது. ஆனால் மாலைமுரசு இதழில் வெளியிட்டுள்ள முடிவுகளில் 7-வது பரிசே இல்லை. இந்த முடிவின்படி ரூ 5×60,000=ரூ30,0000 அரசுக்குத்தானே செல்கிறது. ஆங்கிலம் தெரியாதவர்களுக்கு இது எப்படித் தெரியும்?

— D.A. ஷரட்

## வேடிக்கை பார்த்தால் தண்டனை

இரண்டு பேர் சண்டை போட்டுக் கொள்ளும்போது அவர்களை விலக்கிவிட முன்வராமல் சுற்றிநின்று வேடிக்கை பார்ப்பவர்கள், பெண்களைச் சீண்டுபவர்களை கண்டிப்பதை விட்டு ஒதுங்கி நின்று ரசிப்பவர்கள், அக்கிரமங்கள், அநியாயங்களை ஜன்னல் வழியாக, அல்லது வாசலில் நின்று அமைதியாக வேடிக்கை பார்ப்பவர்கள் எல்லோரும் ஒரு விதத்தில் குற்றவாளிகள்தான்! ஆனால் சமூகத்தைச் சீர்திருத்தும் நோக்கத்துடன் இவர்களைச் சட்டப்படி குற்றவாளிகளாக்கியுள்ளது அமெரிக்காவிலுள்ள மினிசோட்டா மாநிலம். அங்கு இப்படிப்பட்ட குற்றவாளிகளுக்கு 100 டாலர் பணம் அபராதமாக விதிக்கப்படுகிறது.

யுடன் கூறுகிறார். அரசு தரும் பணத்தில், வாசகர்கள் மேலும் தரும் பணத்தில் இவர்களுக்கு பத்திரிகைகளை வாங்கி போடுவதற்கு நேரமில்லை போலிருக்கிறது? இதற்குப் பிறகாவது மதுரை பெரிய நூலகத்தில் எல்லாப் பத்திரிகைகளைப் படிக்கும் விடிவுகாலம் பிறக்குமா?

ப. சங்கானம் பி.ஏ. மதுரை - 625001.

FREE E- BOOKS , www.thamizham.net.,

**தஞ்சையில் திருட்டுத் தராசுகள் :**

தஞ்சைப் பேருந்து நிலையத்திற்கு அருகாமையிலுள்ள (மேற்குப் பகுதியில்) திராட்சைப்பழக் கடைகளில் ஒருவரும் ஒழுங்கான தராசுகளைப் பயன்படுத்துவதில்லை. எடை வைக்கும் தட்டிலுள்ள சங்கிலியை ஒரு முறுக்கு முறுக்கி தராசின் அலகுமேல் சுற்றி வைத்திருக்கிறார்கள். கால் கிலோக்கு 100 முதல் 150 கிராம் திராட்சையே நிற்கிறது. எடை சரியில்லையே என்று கேட்டால் சரியான எடை வேண்டுமானால் அதிகமாகக் காசு கொடுக்க வேண்டுமென் கிறார்கள். அப்படியே அதிகக்காசு கொடுத்தாலும் 200 கிராமிற்கு மேல் வருவதில்லை என்பது தான் வேதனை யிலும் வேதனை. ஒரு வேடிக்கை என்னவென்றால் சரியான எடை 1 ரூபாய் என்றும் 2 ரூபாய் என்றும் விளம்பரம் வேறு செய்வதுதான். இச்செய்தியை 'சுட்டி' மூலம் அறிந்த பிறகாவது சம்மந்தப்பட்ட அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா?

—டாக்டர் வி. இரா. பகதவச்சலம் முசிறி

# வாசகர் குமுறல்

**பட்டினி போடும் நூலகம்:**

மதுரை நகரத்திற்கே தலைமை நூலகமாக இருப்பது, மதுரை சிம்மக்கல் அருகே இருக்கும் பொது நூலகம் தான். ஆனால் பெரிய நூலகம் என்று பெயர்தான் பெத்த பெயர். உள்ளே படிப்பதற்குத் தமிழ்ப் பத்திரிகைகளே இருக்காது. ஆங்கிலப் பத்திரிகைளோ இதைவிட அரிது. இதற்குக் காரணமென்ன என்றால், படிக்க வருபவர்கள் புத்தகங்களை திருடிச் சென்று விடுகிறார்களாம். அதற்காகப் புத்தகங்களை வாங்காமல் அல்லது வாங்கியது நூலகர்அறையில் தூங்கும். கேட்டால்தான், தூசித் தட்டிக் கொடுப்பார்கள். திருட்டுப் போவது பற்றி எந்த வித நடவடிக்கையும் எடுக்காமல் படிக்க வரும் வாசகர்களை இப்படிப் பட்டினி போடுவது நன்றாக இல்லை.புத்ததகங்கள் இல்லாதது பற்றி அங்குள்ள கண்கா ணிப்பாளரிடம் விசாரித்தால், உள்ளே இருக்கிற புத்தகங் களைப் படிங்கபோதும் என்று அலட்சிய மனப்பான்மை

FREE E- BOOKS , www.thamizham.net.,

# எமக்கு வந்தவை

*எலும்புக்கூடுகள் எர்மலையானால்?:* (புதுக்கவிதைகள் தொகுப்பு) ஆசிரியர் : வே. வெங்கிருபழனி, வெளியீடு : எழிலமுதன், 14, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5 விலை : ரூ2.00

*எலுமிச்சை வைத்தியம் :* (மருத்துவ நூல்) ஆசிரியர் : கே. எஸ். லட்சுமணன், வெளியீடு : தமிழ்நாடு பதிப்பகம் 36/3, சரோஜினி தெரு, தியாகராய நகர், சென்னை-600 017 விலை : ரூ3.00.

*பல் நோய் மருந்துகள் :* (மருத்துவ நூல்) ஆசிரியர் : கே. எஸ். லட்சுமணன், வெளியீடு : தமிழ்நாடு பதிப்பகம், 36/3, சரோஜினி தெரு, தியாகராய நகர், சென்னை-60 0017 விலை : ரூ3.00

*தேனின் மருத்துவ குணங்கள் :* (மருத்துவ நூல்) ஆசிரியர் : கே. எஸ் லட்சுமணன், வெளியீடு : தமிழ்நாடு பதிப்பகம், 36/3, சரோஜினி தெரு, திகாயராய நகர், சென்னை-600 017 விலை : ரூ3.00.

*தாது விருத்திக்கு தன்னிகரற்ற மருந்துகள் :* (மருத்துவ நூல்), ஆசிரியர் : கே. எஸ். லட்சுமணன், வெளியீடு : தமிழ்நாடு பதிப்பகம், 36/3, சரோஜினி தெரு, தியாகராய நகர், சென்னை-600 017, விலை : ரூ3.00.

*நோய் தீர்க்கும் கீரைகள் :* (மருத்துவ நூல்) ஆசிரியர் : கே எஸ். லட்சுமணன், வெளியீடு : தமிழ்நாடு பதிப்பகம், 36/3, சரோஜினி தெரு, தியாகராய நகர், சென்னை-600 017 விலை : ரூ3.00.

*ஏழையின் குமுறல் :* (மாத இதழ்), தொடர்பு முகவரி : பதிப்பகம் மார்த்தாண்டம்—629 165, குமரி மாவட்டம், ஆண்டு சந்தா : ரூ8.00. தனிப்பிரதி : 70காசு.

*புதையல் :* (சிறுவர் காவல்), ஆசிரியர் : நாஞ்சில் அப்பு, வெளியீடு : MSM பதிப்பகம், நாகர் கோவில்-629 002 விலை : 50காசு,


---

*சாய்த்து விடுகின்றன. தேனில் விழுந்து சாகும் எறும்புகளைப் போல விரைவில் இவர்கள் அழிந்து போகிறார்கள். மேலை நாடுகளிலுள்ள நிலையைத் தேனைச் சுவைக்கும் நிலையாகச் சொல்லலாம்.* '[illegible]'த்திலிருந்து.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# நான் முதலமைச்சரானால்...

## பெருஞ்சித்திரனார்



இப்பொழுது திரைப்படங்களை வலிந்து கைப்பற்றிக் கொண்டிருப்பவர்கள் கலைஞர்களல்லர்! கொலைஞர்கள்! கொள்ளைக்காரர்கள்! சூதாடிகள்! கற்பழிக்கும் நோக்கத்தில் இயங்கும் கயவர்கள்! அவர்கள் அனைவருக்கும் திரைப்படம் ஒரு விளையாட்டுக் களஞ்சியமாக உள்ளது.

எனக்கு முதலமைச்சராகும் வாய்ப்போ அல்லது தன்னதிகாரமோ கிடைத்தால் அக்கொடியவர்களை அவ்வறிவியல் ஆக்கத் துறையிலிருந்து அப்புறப்படுத்தும் முயற்சியை உடனே மேற்கொள்ளுவேன். அடுத்த தேர்தலைப் பற்றியோ, அவர்களின் எதிர்ப்புகள், போராட்டங்களைப் பற்றியோ ஒருசிறிதும் கவலைப்பட மாட்டேன்; அல்லது நான் கொலை செய்யப் படுவதைப் பற்றியும் கூட அஞ்ச மாட்டேன்.

ஆனால் இப்பொழுதுள்ள முதலமைச்சருக்குத் திரைப் படங்களைத் தடைசெய்யும் எண்ணம் வருவது கடினம்! ஏனெனில் அவரே ஒரு நடிகர்! சுவரொட்டிகளை முன்பு ஒரு முறை தடைசெய்வதாகக் கூறிக் காலப்போக்கில் நழுவி விட்டார். அதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. நாட்டில் ஒட்டப்படும் சுவரொட்டிகளில் 80 விழுக்காடு அவருடையனவும் அவர் நடித்த படங்களுடையனவும் அவரின் கட்சியைச் சார்ந்தனவுமே ஆகும்.

ஐரோப்பிய நாடுகளில் திரைப்படக் கொட்டகைகளின் முன்னர் தவிர நகரின் வேறு எந்த இடத்திலும் திரைப் படச் சுவரொட்டியை மட்டுமன்று வேறு எந்தச் சுவரொட்டியையும் பார்க்கவே முடியாது. ஊரிலுள்ள சுவர்கள் அவ்வளவு தூய்மையாக இருக்கின்றன.

ஒழுக்கக் கேட்டையும் கூட ஒரு நெறிமுறைக்கு உட்பட்டே ஒரு நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இங்குள்ள நிலைமைகள் இளைஞர்களை முழுவதுமாக இத்திரைப்படக் காட்சிகளிலும் கீழ்த்தர உணர்வுகளிலும்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# நமது மாதுளம் பழ மருத்துவம்

மத்திய தரைக்கடற்கரைப் பகுதியிலிருந்து பரவிய வரலாற்றுப் புகழுடையது மாதுளம்பழம். யூதமன்னன் சாலமோன் மாதுளம் பற்றி பாடிய பாடல்கள் உள்ளன. பெரிய மாதுளம் தோப்பே இவன் வைத்திருந்தான்.

✱ தீராத மலச்சிக்கலா? தொடர்ந்து 3 நாட்களுக்கு அரை மாதுளம்பழம் பகல் உணவிற்குப்பின் சாப்பிடுங்கள். இதற்கு பின் மலச்சிக்கலே இருக்காது.

✱ விடாத வறட்டு இருமலா? இதற்கும் மேற்கண்டவாறு 3 நாட்கள் சாப்பிட்டு வந்தால் நல்ல குணம் தெரியும்.

✱ எந்த மருந்திலும் குணமாகாத சீதபேதியா? மாதுளை இருக்க பயமேன். மாதுளம் தோலை மைபோல அரைத்து, அதில் எலுமிச்சம்பழ அளவு எடுத்து அரை ஆழாக்கு எருமை தயிரில் கலக்கி, காலையில் மட்டும் தொடர்ந்து 3 நாட்கள் சாப்பிடுங்கள். முன்னோர் கைகண்ட முறையிது.

✱ அடிக்கடி மாதுளம்பழத்தைச் சாப்பிட்டு வந்தால் இரத்தம் சுத்தமாகி புதிய இரத்தம் உண்டாகும். இதன் காரணமாக உடல் பயம், அறிவு வளர்ச்சி, நினைவாற்றல் ஏற்படும்; எலும்புகள், பற்கள் உறுதிப்படும். பித்த சம்மந்தமான நோய்கள் ஓடிப்போகும்.

✱ மாதுளையில் 100க்கு மேற்பட்ட வகைகள் உண்டு. எந்தவகையும் சத்துடையது. வைட்டமின் 'சி' மக்னீசியம், கந்தகம் ஆகிய சத்துக்கள் மாதுளையில் அதிகம்.

✱ மாதுளையின் விதைக்குக் காச ரோகத்தைக் கண்டிக்கும் ஆற்றலும். சுக்கிலத்தைப் பெருக்கும் சக்தியும் நீர்ச் சுருக்கு, வயிற்று நோய்களைக் குணமாக்கும் தன்மையும் உண்டு.

✱ "மாதுளை பொறாமையையும், பகையுணர்வையும் களையச் செய்யும் ஆற்றல் உள்ளதால், அதனை உண்ணுங்கள்" என்று மொழிகிறார் முகம்மது நபி அவர்கள்.

(அடுத்து : நமது தண்ணீர் மருத்துவம்) —சித்த

FREE E- BOOKS , www.thamizham.net.,

திரையுலகப் பிரமுகர்கள்: 4

# இயக்குநர் பீம்சிங்



**மனிதனின் பலவீனமான, கீழான உணர்ச்சிகளுக்குத் தீனி போடாமல் கடைசிவரை நின்று படமெடுத்தார் பீம்சிங்.**

ஆனால் அவர் அமைத்துக் கொடுத்த குடும்பக்கதை மசாலா பாணியை, பலரும் அபாசப்படுத்தி, அருவருப்பாக்கி அலங்கோலப்படுத்துவது இன்று பாக்கியராஜ் வரை தொடர்கிறது

பீம்சிங்கின் மசாலா கதைகளைப்பின் பற்றி படமெடுத்தவர்களிடம் பீம்சிங்கின் தொழில் நேர்மையும், குறைந்தபட்ச சமூகப்பொறுப்பும் இல்லை. பீம்சிங்கின் கடும் உழைப்பு ஆச்சரியகரமானது. சாது மிரண்டால் படத்தை இந்தியில் "சாது அவர் சைத்தான்" என்று எடுத்தார். இப்படத்தின் முக்கிய காட்சியில், ஒன்றிப்போய் 365 அடிகள் ஒரே நேரத்தில் இடைவிடாமல், (சாதனை) இயக்கியதைக் கண்டு நடித்த இந்தி நடிகர்களே மலைத்து விட்டனர். தன்னை மறந்த இந்தக்கடும் உழைப்பின் இறுதியில் மாரடைப்பால் வீழ்ந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மருத்துவமனையில் இருந்தபோது திடீரென்று கிளம்பி ஆந்திரா சென்று ஒரு தெலுங்குப்படத்தின் வெளிப்புறப் படப்பிடிப்பில் கலந்து கொண்டு விட்டுத் திரும்பி வந்து படுத்துக் கொண்டிருக்கிறார்.

70வதுகளில் தமிழ்த்திரைப்படங்களில் "ஜனரஞ்சகம்" என்ற பெயரில் பல அருவருப்புகள் எல்லாம் படமசாலாக்கள் ஆயின. புதிய படமொன்றை வெளியிடவிருந்த ஒரு 'வெற்றிப்பட' பிரமுகர் ஒருவரின் கூற்று ஒரு பத்திரிகையில் இப்படி வெளிவந்தது, அப்போதைய நிலவரத்தைத் தெளிவு படுத்தும் :

"இந்தப் படத்திலேயும் போன படம் மாதிரியே தான் செக்ஸ் காட்சிகள் வெச்சிருக்கேன். ரெண்டு சண்டை சேர்த்திருக்கேன், கொஞ்சம் ஆபாசமான ஜோக்ஸூம் இருக்குது · காமெடி, காபரே எல்லாம் கொண்டுவந்தாச்சு.

FREE E- BOOKS , www.thamizham.net.,

ஒரு படத்துலே இதுக்கு மேலே என்ன செய்ய முடியும்?.. ஒரு படத்துக்குச் செய்ய வேண்டியது பூரா செய்துட்டேன். கடவுள் கைவிட மாட்டார்ன்னு நினைக்கிறேன்."

இந்தப் பிரமுகரின் படம் சக்கை போடு போட்டது.

இந்தச் சூழலில் பீம்சிங்கின் படங்கள் வெளிவருவது மிகவும் குறைந்து விட்டது. கடைசியாக 1967இல் இவரது 'ஆலயம்' படம் அரசின் வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றாலும் வசூலில் தோல்விகண்டது. எனவே அடுத்த 3 ஆண்டுகள் இவர் படங்களே வரமுடியவில்லை. 1970இல் தானே சொந்தமாக, முதல் முறையாக வண்ணத்தில் படம் எடுத்து தன்னை நிலைநிறுத்த முயன்றார். பாதுகாப்பு என்ற அப்படம் திரையுலகில் அவருக்குப் பாதுகாப்பளிக்காத முறையில் அமைந்து விட்டது. விளைவு, அடுத்த 4 ஆண்டுகள் தமிழ்ப்படவுலகிலிருந்து வனவாசம்.

4 ஆண்டுகளுக்குப் பிறகுவந்த ஓரிரு படங்களும் அவரது 10 ஆண்டுகளுக்கு முந்தைய பார்முலா பாணியிலேயே மாறுதலன்றி வந்தன. அப்படி வந்த பாத பூஜை, கணவன் மனைவி, நீ வாழ வேண்டும் என்ற இந்த 3 படங்களில் ஒன்று கூட பீம்சிங்கிற்கு பழைய புகழை மீட்டுத் தருவதாக இல்லை.

இக்காலக்கட்டத்தில் படவுலகில் புதிய மாறுதல்கள் பாலசந்தரின் அரங்கேற்றத்திற்குப்பின் ஏற்பட்டன (1973). பாலசந்தர் படங்கள் ஏற்படுத்திய புதிய சூழல் பீம்சிங்கைக் கடுமையாக சிந்திக்க வைத்திருக்க வேண்டும். தனது வழக்கமான 'பார்முலா'வை பீம்சிங் முதன்முறையாக கைவிட்டு படம் எடுக்க முன் வந்ததற்கு, வேறு என்ன காரணம்?

அவரது வழக்கமான தனிநபர் பிரச்சனைகளால் குடும்ப உறவில் ஏற்படும் சிக்கல்கள், தீர்வுகள் என்பதற்கு அப்பால் சென்று விதிவிலக்காக சமூகப் பார்வை பொதிந்த ஜெயகாந்தனின் 'சில நேரங்களில் சில மனிதர்கள்' நாவலைச் சொந்தமாகப் படமெடுக்க முன் வந்தார்.

மிகவும் வித்தியாசமான முதல் முயற்சி என்பதால் இப்படத்தின் திரைக்கதை மட்டுமன்றி, எந்தக் கோணத்தில், என்ன விஸ்தீரணத்தில் காட்சி அமைய வேண்டும் என்ற முழுக் குறிப்பையும் ஜெயகாந்தனையே எழுதித்தர செய்தார்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

பீம்சிங்கின் வழக்கமான நீண்ட செயற்கை வசனம், செட் அமைப்பு, நாடகப்பாணி இவை எல்லாம் மூட்டை கட்டப்பட்டு, எதார்த்தமான போக்கிலேயே வந்த இப்படம் தமிழ் திரையுலகில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. பல ஆண்டுகளுக்குப் பின் கிடைத்த இந்த வெற்றியில் தானே ஊறித் திளைக்காமல் தன்னை விட ஜெயகாந்தனுக்கே



இதில் அதிகப்பங்கு என்று ஒளிவு மறைவின்றி பீம்சிங் கடைசியாக எழுதிய கட்டுரையொன்றில் குறிப்பிடுகிறார். தன் இறந்த கால தவறுகளை விமர்சிக்கும் முதிர்ச்சி பெற்ற பீம்சிங்கை இங்கே பார்க்கலாம் ;—

"...ஒரு மனிதனுக்கு முதுகெலும்பு எவ்வளவு முக்கிய மோ, அவ்வளவு முக்கியம் ஒரு திரைப்படத்துக்குத் திரைக் கதையமைப்பு. இதை இத்துறையில் இருப்போர் பெரும் பாலோர் செய்வதில்லை என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஏன், நானே கூட இந்தச் 'சில நேரங்களில் சில மனிதர்கள்' கதைக்குத் திரைக்கதை அமைக்கத் திரு. J. K. அவர்கள் எடுத்துக் கொண்ட உழைப்பையும் நேரத்தையும் போல், என்னால் உருவாக்கப் பட்ட மற்ற திரைப்படங்களுக்கு எடுத்துக்கொண்டேனா என்றால், இல்லை என்று தான் என் மனச்சாட்சி பதில் சொல்லும்."

பீம்சிங்கிடமிருந்து அசிங்கமில்லாத வித்தியாசமான படங்களை அவரது தெள்ளந் தெளிவான கதை சொல்லும் அழகுடன் ரசிகர்கள் எதிர்பார்த்த போது "ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்" படத்தை அவர் இயக்கும் செய்தி வந்தது. ஆனால் இப்படத்தின் 3-வது நாள் படப்பிடிப்பு வரை தான் அவர் உயிரோடிருந்தார்.

தொடர்ந்து அவர் படங்களை இயக்கியிருந்தால், அவரது படங்கள் ஓரளவு சமூகப்பார்வையுடனேயே இருந்திருக்கக்கூடும். கலைநேர்த்தியிலும் தமிழ்த்திரை யுலகிற்கு சில நல்ல படங்கள் கிடைத்திருக்கக் கூடும்

-முற்றும்- — சுட்டி விமர்சனக்குழு

[அடுத்து : இயக்குநர் கே. பாலசந்தர்]

FREE E- BOOKS , www.thamizham.net.,

பிரபலம் அல்லாத ஏடுகளிலும் பிரபல
ஏடுகளிலும் வெளிவந்த

# ஜோதிர்லதா கிரிஜாவின்

சிறுகதைகளின் தொகுப்பு —

## "வாரிசுகள் தொடர்வார்கள்"

விலை: ரூ. 8/- மட்டுமே
கிடைக்குமிடம்:

மகேந்திரா பதிப்பகம் 830, சிண்டிகேட் வங்கி ஊழியர் குடியிருப்பு
அண்ணாநகர் வெஸ்டர்ன் எக்ஸ்டென்ஷன், சென்னை–600 101

பதிவுத்தபாலில் பெற ரூ. 10-ம், ரெகார்டெட் டெலிவரியில் பெற ரூ. 9-ம், செர்டிஃபிகேட் ஆப் போஸ்டிங் பெற ரூ. 8-ம் தெளிவான முகவரியுடன் மணி-ஆர்டர் அனுப்புக.

# எந்த ஐயத்திற்கும் பதில்

*கட்டி பதிலளித்த சில கேள்விகள்?*

- ✷ நான் எந்த மதத்தையும், சாதியையும் சாராமல் இருக்க முடியுமா? சட்டப் பூர்வமான விளக்கம் சொல்லுங்கள்.
- ✷ பீயர்லஸ்ஸில் பணம் கட்டுவது பாதுகாப்பானதா?
- ✷ 2 ஆண்டுகளாக மலச்சிக்கலால் அவதிப்படுகிறேன். தீர்க்க வழி சொல்லுங்கள்.
- ✷ SITUATIONAL ENGLISH—by Longman — இப்புத்தகம் எங்குக் கிடைக்கும்?
- ✷ தூக்கத்தில விந்து வெளிப்படுகிறது. இது ஆபத்தானதா?
- ✷ நான் ஒரு தொழுநோயாளியைத் தொட்டேன். தீங்கு நேருமா?
- ✷ புதிய மாத இதழ் தொடங்கும் வழி முறைகள் என்ன?
- ✷ வெளிநாட்டிலிருந்து ஓர் இயந்திரம் தருவிக்க வேண்டும். அதன் வழிமுறைகள் பற்றி விளக்கம் தாருங்கள்

இது போல உங்கள் ஐயம் எதைப்பற்றியாயினும் இரண்டே ரூபாய் செலவில், பதில் பெறுங்கள் அந்தத்துறை நிபுணர்களிடமிருந்து பதில் பெற்று உங்களுக்குத் தனிப்பட்ட முறையில் அஞ்சலில் அனுப்புகிறோம்

கேள்வி ஒன்றுக்கு ரூ 2-00 விதம் பணவிடை அல்லது அஞ்சல் தலை அனுப்புங்கள்.

"கட்டி பதிலளாதுழு" 1494 அண்ணாநகர் சென்னை-600 040,


FREE E- BOOKS , www.thamizham.net.,

# வழக்காடும் மன்றங்களில் வசதிக் குறைவுகள்

சென்னைப்பெருநகரில் உள்ள குற்றவியல் மண்டபங்கள் - நீதியின் சன்னிதானங்கள் - அங்காடிகளைவிட அலங்கோலமாகக்காட்சி தருகின்றன

நீதியினை நாடிவரும் ஏழை எளிய மக்கள் நிற்க இடமின்றி - நீதிமன்ற கூடங்கள் நெருக்கடி மிகுந்த - அடிப்படை வசதியற்று, அலங்கோலச் சின்னங்களாக - சிதைந்து கிடக்கின்றன.

"குடிக்கத் தண்ணீர் உண்டா?"
"சிறுநீர் கழிப்பிடம் உண்டா?"
"அமர இடம் உண்டா?"

அழைப்பாணை பெற்றவர்கள் நீதிபதியின் அனுமதி பெற்றே வெளியில் செல்ல வேண்டும். அவர்கள காலை 11 மணிமுதல் மாலை 4-05 மணிவரை வெறுந்தரையில்தான் அமரவேண்டும்.

கண்ணியமுள்ள எவனும் இப்படிப்பட்ட மனிதனை இழிவாக நடத்தும், மன்றங்களின் பக்கம் தலை வைத்துக்கூட படுக்கமாட்டான்.

வழக்குரைஞர்களுக்கு வசதியான இடமுண்டா?
மரத்தடியும் - வராண்டாவில் வாசற்படியும்
நிழற்கூடங்களா? நிற்கும் இடங்களா?

ஆயிரமாயிரம் மக்கள் அன்றாடம் வரும் நீதிமன்றங்களுக்கு ஒளி விளக்குண்டா?

இருளில் நீதியைத் தேடும் இடங்களாக - பாழடைந்த மண்டபங்களாகக் காட்சி தருகின்றன.

வழக்குரைஞர்கள் அமர நாற்காலிகள் உண்டா?
உண்டு, உடைந்து எறிந்த ஒன்றிரண்டு நாற்காலிகள். நம் அங்கங்களையும், அங்கிகளையும் குத்திக் கிழிக்கும் கோரமான நாற்காலிகள்.

சைதை நீதிமன்றத்தில் நீதிபதிக்கு 18-வது நடுவருக்குத் தனி அறை இல்லை. திரைச்சீலை தொங்க விடப்பட்ட

FREE E- BOOKS , www.thamizham.net.,

மன்றவிடமே அவரின் இருப்பிடம், நீதியின் அரசரே திரையிட்டு வாழவேண்டும். என்ற இழிநிலை. மீண்டும் மீண்டும் முறையிட்டும் பலன் இல்லையே.

மின் ஒளியூட்ட மன்றங்களுக்கு நல்ல வழி கிடைக்காதா? என்று ஆயிரம் மனுக்கள் தந்தும். ஆவன செய்வதில்லை.

நாடோள்வோர், சட்டமன்ற உறுப்பினர்களில் பலர் வழக்குரைஞர்களாக இருந்தவர்களே!

தாங்கள் பணியாற்றிய பழைய இடத்தை மறந்தது ஏனோ? பதவி முடிந்ததும் உதவிக்கு வருவதும் இம்மன்றங்களே. குளுதளு வசதி, கேட்கவில்லை. குறைந்தபட்ச வசதிகளையே கேட்கிறோம் என்று வழக்கறிஞர்களின் சங்கங்கள் - பொதுநலம் நாடும் சங்கங்கள் இணைந்து இணைந்து மீண்டும் மீண்டும் அரசின் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும்.

· உயர் நீதிமன்றத்தில் மட்டும் வழக்குரைஞர்கள் அமர்ந்து செயலாற்ற தனித்தனி அறைகள், குறைந்த வாடகையில் கொடுக்கப்படுகின்றன. தமிழகத்தில் எந்த குற்றவியல் மன்றங்களிலாவது இப்படியோர் வசதியுண்டா?

—பொன்னகரம் இதழில் வழக்கறிஞர் A. K. S அபுதாகிர் B. A. B. L

## பத்திரிகைத்துறையில் செயற்கைக்கோள்

விண்வெளிக்கோளைப்பயன்படுத்தி ஒரு பத்திரிகையின் வெளியூர்ப் பதிப்புக்கள் அந்தந்த ஊர்களில் ஒரே நேரத்தில் அச்சாகின்றன. இது நம் நாட்டில் அல்ல. சோவியத் யூனியனில்!

'ஒரைசன்' என்ற தகவல் செயற்கைககோளை இதற்காகப் பயன்படுத்துகிறார்கள். ஒரு இடத்தில் தயாராகும் பத்திரிகையின் பக்கங்களின் படம் விண்வெளி வழியாக நேரடியாக வெளியூர்களிலுள்ள பத்திரிகை அலுவலக அச்சுக்கூடங்களுக்குச் செல்கிறது. இம்முறையால் பத்திரிகைகள் நன்றாக அச்சாகின்றனவாம்.

சோவியத் யூனியனில் இம்முறையில் 8 தேசிய தினசரிகளும் 10 குடியரசு தினப் பத்திரிகைளும அச்சாகின்றன.

FREE E- BOOKS , www.thamizham.net.,



# கூந்தலை வளர்த்து வா, போ!



**புதுடில்லியில்** திராதப்நகரா என்பவர் ஒரு கல்லூரிப் பேராசிரியை. இவரை நிர்வாகம் தற்காலிக வேலை நீக்கம் செய்தது. அவர் செய்த குற்றம் தலைமுடியை வெட்டி 'பாப்' செய்து கொண்டதுதான். மூன்று மாதம் சம்பளமில்லாத நிர்ப்பந்த விடுப்பு கூந்தல் வளர்த்துக் கொள்வதற்காக அவருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பாரதப்பிரதமர் வேலைக்கே 'பாப்' தடையாக இல்லாத போது ஒரு ஆசிரியை பதவிக்கு மட்டும் ஏன் இப்படியொரு தடை?. ஆசிரியர் தொழில் செய்ய தலைமுடி வளர்க்க வேண்டுமென்றால் ஆண் ஆசிரியர்கள் 'கிராப்' வெட்டிக் கொள்வது மட்டும் எப்படி சரியாகும்? இப்படியெல்லாம் திருமதி நகரா நினைத்தாலும் பகிரங்கமாக கேட்டு விட்டால்... வேலையே போய் விடுமோ?!


## பொருத்தம்



ஜாதிப் பொருத்தம்
பலமுறை பார்த்தார்கள்;
சீர் வரிசைகளை
நிதானமாக சரிபார்த்தார்கள்
வரதட்சணைவிவகாரங்
களை
திருப்தியாக முடித்தார்கள்;
உற்றார் உறவினர்களை
ஊர்மெச்ச உபசரித்தார்கள்!
— [illegible]மை

ஆனால்
ஆயிரமாயிரம் சிந்தனை
களில்
'மனப்பொருத்தம்' பார்க்க
மறந்து விட்டபடியால்...
—இன்று
ஒரு பிணத்தைத்
தூக்கிக்கொண்டு போகிறார்
கள்.
—கோவை. கிருபாகரன்


FREE E-BOOKS , www.thamizham.net.,




ஒரு குதிரைக்கும் கலைமானுக்கும் சண்டை ஏற்பட்டது. குதிரையால் கலைமானை வஞ்சம் தீர்த்துக் கொள்ள முடியவில்லை. ஆகவே அது மனிதனின் உதவியை நாடியது

மனிதன் குதிரைக்குச் சேணமும், கடிவாளமும் போட்டான். பிறகு அதன் மீது ஏறி உட்கார்ந்து கலைமானை விரட்டிப் பிடித்துக் கொன்றான்.

கலைமான் மாண்டதைக் கண்டு குதிரை கனைத்து தன் மகிழ்ச்சியை வெளிக்காட்டியது. மனிதனைப் பார்த்து, "ஐயா உமக்கு மிகக நன்றி. என் நெடுநாள் எதிரி என் கண் முன்பே துடி துடித்து இறந்ததைக் காணச் செய்ததற்கு என்ன கைமாறு செய்யப் போகிறேன்! இறந்து கிடக்கும் இம் மானையே என் பரிசாக ஏற்றுக் கொள்ளும்." என்று கூறி, தன் கடிவாளத்தை நீக்கித் தன்னை விடுவிக்கும்படிக கேட்டது.




அம் மனிதன் தன் தலையை ஆட்டி, "முடியாது, முடியாது; நீ எவ்வளவு உபயோகமாய் இருக்கிறாய் என்று அறிந்த பின் உன்னை எப்படி விட்டுவிட முடியும்?" என்றுரைத்து, அதன் வேண்டுகோளைப் புறக்கணித்து விட்டான்.

குதிரையின் வஞ்சம் தீர்ந்தது. ஆனால் அதன் விடுதலையோ பறி போனது!

—கலைஞர் [illegible] ஈசாப் கதைகளிலிருந்து

செக்கோஸ்லோவாகிய நாட்டில் உயிருக்கு ஆபத்தான வேளையில், அவசரமாகத் தேவைப்படும் மருந்துகளுக்கு [illegible] மருந்துக் கடைக்காரர்கள் காசு வாங்குவது [illegible].

FREE E- BOOKS , www.thamizham.net.,



# பள்ளிச் சீருடைகள்

## L.K.G., U.K.G.

● **இன்றைய குழந்தைகளின் சீருடைகள் பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

இன்றைய குழந்தைகளின் சீருடைகள் நம்முடைய பண்பாட்டைப் பிரதிபலிக்கவில்லை. அவை ஆங்கிலோ இந்தியப் பண்பாட்டை வளர்க்கும் உடையாக இருக்கின்றன. அந்தப் பண்பாட்டையே அது குழந்தைகளின் மனதில் தக்கவைத்து வளர்க்கிறது. பாரதநாட்டின் பாரம்பரிய உணர்வுகள், பண்பாடுகள் ஏற்படாமல் தடுக்கிறது.

● **எல். கே. ஜீ., யு. கே. ஜீ. வகுப்புகள் குழந்தைகளுக்கு அவசியமா?**

மேலை நாடுகளில் எல். கே. ஜீ., யு. கே. ஜீ களில் படிப்பே கிடையாது. அங்கே நாலு வயது வரை குழந்தைகளை "மழலையர்கள் அறிவுப் பூங்கா" என்ற நிறுவனங்களில் சேர்த்து விளையாட விட்டும், குழந்தைகளுக்கு இணைந்து பழகும் வழக்கத்தையும் மட்டுமே போதிக்கிறார்கள். ஐந்து வயதுக்குப் பிறகே அங்கே படிப்புத் தொடங்கும்.

இதுபோல நம் நாட்டிலும் ஐந்து வயது பூர்த்தியான பிறகே குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கத் தொடங்க வேண்டும். எல். கே. ஜீ., யு. கே ஜீ. என்னும் மழலையர் வகுப்புகளில் அவர்கள் மகிழ்ச்சியுடன் விளையாடி அறிவைப் பெருக்கிக்கொள்ளும் வயதில் இங்கு தாய் மொழியை விடுத்து ஆங்கிலம் கற்பிக்கப் படுகிறது.

இது கொடுமை. இதன் மூலமாக அவர்களுக்குத் தாய் மொழியே கூட மறந்து போகும். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வளர்ந்து வந்துள்ள நமது உன்னதப் பண்பாட்டின் வேர் அவர்கள் மனதில் பதியாது போய்விடும். குழந்தைகள் தாங்கள் பிறந்த மாநிலத்திலேயே அன்னியர்களாக உருவாகி விடுவார்கள்.

தொழிலதிபர் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் அளித்த பேட்டியிலிருந்து

FREE E- BOOKS , www.thamizham.net.,

● கல்வித் துறையில் நாம் கண்டுள்ள முன்னேற்றம் என்ன?

—எஸ். கே சேலம்-1.

அபாரம் போங்கள்! சில நாட்களுக்கு முன் இருந்த 2 பல்கலைக் கழகங்கள், 9 பல்கலைக் கழகங்களாக விங்கி விட்டன.

● அரசியல் வாதிகளின் கட்சித்தாவல்களைத் தடுக்க என்ன வழி?

—எம். சம்பத், வேலாயுதம் பாளையம்.

ஒரு குறிப்பிட்ட கட்சியில் இருப்பதாலேயே மக்கள் ஒருவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். கட்சி மாறினால் பதவியை முதலில் அவர் இழக்கச் செய்ய வேண்டும். ஆதாயமிழந்தால் அரசியல் வாதி கட்சித் தாவ மாட்டான்.

● பல இளைஞர்கள், மாணவர்கள் நடத்தும் முற்போக்கு, இலக்கியப் பத்திரிகைகள் இருந்தும், பல மாணவ இளைஞர்களின் படைப்புக்களைப் புறக்கணிப்பது ஏன்?


—இராஜூதி, வண்டலூர்.

வெளியிடும் பக்கங்களைவிட பல மடங்கு படைப்புகள் வருவது தான் காரணம். நிறைய படைப்புகள் வந்தாலும், நல்ல படைப்புகள் நிறைய வருவதில்லையே! புறக்கணிப்பிற்குரிய காரணம் பெரும் பாலும் இது தான். சுட்டிக்கும் இது பொருந்தும்.

● பஞ்சாபில் 'ராணுவ நடவடிக்கை' பற்றி தங்களின் கருத்து யாது? இதனால் பஞ்சாப் பிரச்சனை தீருமா?

—R. ரவி, வாற்தொழுவு வேலூர்.

ராணுவ நடவடிக்கை இந்நிலையில் தவிர்க்க முடியாதது தான். ஆனால் இப்பிரச்சனையைப் புரையோடாமல் முன்பே தவிர்த்திருக்கலாம். பிரச்சனையை வைத்து அரசியல் ஆதாயம் பார்த்துவிட்டு இப்போது பல உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டபின்பே தீர்வுகாண்பது - நிரந்தர தீர்வா என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய ஒன்று. →



FREE E- BOOKS , www.thamizham.net.,

# நடிகை வைஜயந்திமாலாவின் கம்பெனியில்...



சென்னையில் நடிகை வைஜயந்திமாலாவுக்குச் சொந்தமான பாலி கோல்டு ஸ்டோரேஜ் (Poly Cold Storage) என்ற இறால் கம்பெனி உள்ளது. 7 வருடங்களில் ரூ 50 கோடிக்கு மேல் லாபம் சம்பாதித்து விட்ட இக்கம்பெனியில் பணிபுரியும் பெண்களுக்கு அளிக்கப்படும் கூலி மாதம் ரூ300 மட்டுமே. வேலை நேரம் 12 மணி நேரம் ஞாயிற்றுக்கிழமைகளில் 24 மணி நேரம் வேலை செய்ய வேண்டும், கூடுதல் வேலைக்குப் பணம் கிடையாது. லீவு கிடையாது. ஐஸ் கட்டிகளில் இறாலைப் பதப்படுத்தும் அவர்களுக்கு கையுறையோ வேறு எந்தப் பாதுகாப்போ கிடையாது. அதுமட்டும் அல்ல. 7 வருடம் உழைத்த 2 பேரை ஒரு பைசா கூட கொடுக்காமல் வேலையிலிருந்து விரட்டி விட்டனர். அதன் பின் 14 பேர்களை அண்மையில் வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். இப்படி தொழில் செய்யும் இந்த நடிகையும் அவர் கணவரும் தான் 20 அம்சத்திட்டத்தின் மூலம் பிரதமர் இந்திரா காந்தியின் கரங்களைவலுப்படுத்தப் புதிதாக காங்கிரஸில் சேர்ந்திருக்கும் தொண்டர்கள்!

## யாருக்கோ சேருகிறது!



நாம்
விரும்பிக் கேட்பது
இலங்கை வானொலி...
ஆனால்
லைசென்ஸ் கட்டுவதோ
இந்திய வானொலிக்கு...

—நன்றி : புதுவரிகள

● இலட்சிய வாதிகளின் முடிவு என்ன?

—பி. இரவி, போர்த்தி

பெரும்பாலும் இலட்சியவாதிகளின் அழிவும் இலட்சியங்களின் வெற்றியுமாகவே இருந்து வருகிறது.



FREE E-BOOKS , www.thamizham.net.,

# பூவழகி பதிப்பகத்தின் பூந்தமிழ் நூல்

மலேசியா, சிங்கப்பூர், பினாங்கு போக வேண்டுமா?
அந்நாடுகளைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமா?
அங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் என்ன?
சிங்கப்பூர் முன்னேற்றம் கண்டது எப்படி?
இப்படிப் பல அரிய செய்திகளை தாங்கி—அழகு தமிழில்—எளிய நடையில் வெளிவந்திருக்கும் —பயண நூல்—

## மூவேந்தர் முத்து எழுதிய

## 'நெஞ்சம் நிறைந்த மலேசியா'

பக்கங்கள் 378 விலை : ரூ. 25 -
முன்பணம் அனுப்புவோருக்கு தபால் செலவு இலவசம்.
விவரங்களுக்கு : பூவழகி பதிப்பகம்
31, சீனிவாசப் பெருமாள் சன்னதி தெரு, சென்னை-600 014
தொலைபேசி : 847189


8000க்கும் மேற்பட்ட தையல்கள் போடக்கூடிய எந்திரங்களை உருவாக்கி விட்டன. துணியையும் இப்படித் தைக்க வேண்டும் என்று ஆணையும் பிறப்பித்து விட்டால் தானாகவே தைத்து விடக் கூடியதும் தவறு செய்து விட்டால் தானே பிரித்து மீண்டும் சரியாகத் தைத்து விடக் கூடியதுமான மிக நவீன தையல் எந்திரங்களும் முன்னேறிய நாடுகளில் ஆடைத் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகின்றன.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்கள் சட்டைகளின் கழுத்துப்பட்டைகள், கைப்பட்டைகள் இவற்றையெல்லாம் தைக்காமல் ஒருவித பசையினால் ஒட்டி விடும் முறை தற்போது கடைப்பிடிக்கப்படுகிறது. செயற்கை நூலிழைகளினால் ஆன துணிகளை வெட்டிஇம் முறையில் ஒட்டி ஆடைகள் தயாரிக்கின்றனர் இப்பசை மூலம் ஆடை தயாரிப்பது முன்னேற்றம் கண்டால் தையல் எந்திரங்களுக்கு ஓய்வு கிடைத்து விடும்.

—ரேவதி

# சிங்கர்

இன்று விதவிதமாக உடைகளைத் தைத்துத்தரும் தையல் எந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு 100 ஆண்டுகளுக்கு மேல் ஆகி விட்டன இதைக் கண்டுபிடித்தவர் ஐசக் மெரிட் சிங்கர் எந்திரம பழுதுபார்க்கும் தொழிலாளியாக இருந்த இவரிடம் கொண்டுவரப்பட்ட பழுதான தையல் எந்திரத்தை 11 நாட்களில் புதிதாக நவீன முறையில் வடிவமைத்து புகழ் பெற்று விட்டார்.

முதன்முதல் பாரிசைச் சேர்ந்த தீமோனியர் என்பவர் தான் போர் உடைகளைத் தைக்க 80 தையல் எந்திரங்களை தயாரித்தார். ஆனால் எந்திரம் தங்களது பிழைப்பைப் பாதித்து விடும் என்று அஞ்சிய தையல் கலைஞர்கள் கூட்டமொன்று அவரது எந்திரங்களைச் சேதப்படுத்தி அழித்து விட்டது. தீமோனியரின் எந்திரம் ஒரு நூலினால் மட்டுமே தைத்தது. மேலும் கீழுமாக இரு நூல்களைப் பூட்டித் தைக்கும் எந்திரத்தைக் கண்டுபிடித்தவர் எலியாஸ் ஹோவல் என்ற அமெரிக்கர். ஆனால் அமெரிக்காவில் இவரது கண்டுபிடிப்பு ஏற்கப்படவில்லை. கால்களால் இயக்கக்கூடியதும், தொடர்ந்து தைக்கக் கூடியதும் இருநூல்களைப் பூட்டித் தைக்கக் கூடியதுமாக இருந்ததால் 1851ல் சிங்கர் கண்டுபிடித்த தையல் எந்திரம் உலகப் புகழ் பெற்றது.




1875ம் ஆண்டு ஜூலை மாதம் தனது 64வது வயதில் சிங்கர் காலமானார். இவரது சவ ஊர்வலத்தில் 2000 பேர் கலந்து கொண்டனர். 75 வண்டிகள் உடன் செல்ல ஒரு மைல் நீளத்திற்கு ஊர்வலம் சென்றது.

சிங்கரின கண்டுபிடிப்பு இன்று பன்மடங்கு முன்னேற்றம் கண்டுள்ளது. 10,000க்கும் மேற்பட்ட வகையான தையல் எந்திரங்கள் இன்று உருவாகியுள்ளன. ஏழு வித்தியாசமான முறைகளில் துணிகளை மடித்துத் தைக்கும் எந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஒரு நிமிடத்தில்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# நான்தான் - கந்தசாமியின் கல்லீரல் பேசுகிறேன்...





பாவம்! கந்தசாமி தன்னுடைய பல், நகம், இருதயம் போன்றவற்றைப் பற்றி அடிக்கடி கவலைப் படுகிறான். ஆனால் நான் ஒன்று இருக்கிறேனே என்று நினைத்துக் கூடப் பார்ப்பதில்லை. கந்தசாமி என்னைப் பற்றிக் கொஞ்சம், பாட புத்தகங்களில் படித்திருக்கிறான். ஆனால் இப்போது என்னை முற்றும் மறந்து விட்டிருக்கிறான்.

இத்தனைக்கும் நான்தான் அவன் உடம்பிலேயே மிகப் பெரிய சுரப்பி. மற்ற சுரப்பிகள் 50கிராம் எடை என்றால் நான் 3கிலோ இருப்பேன். நான் செய்யும் வேலைகள் ஏராளம். 500க்கும் மேற்பட்ட விதவிதமான வேலைகள் என் தலையில் விழுந்திருக்கின்றன.

நான் இதயக் குழந்தையைக் காக்கும் தாய் என்னுடைய மேல் புறத்தில ஒட்டிக் கொண்டு ஹெப்டிக (HEPATICVEIN) ரத்தக் குழாய் கள் அளவுக்கு மீறி ரத்தத்தைச் சுமந்து கொண்டு இதயத்திற்குப் போனால் அதிகப்படி ரத்தத்தை உறிஞ்சி ஸ்பெடீலைசரைப் போலப் பணியாற்றி இதயத்தைக் காப்பாற்றுகிறேன்.

கந்தசாமி சாப்பிடும் ஏராளமான இனிப்புப் பண்டங்களை அவன் குடல், குளுகோஸ் என்னும் சர்க்கரையாக மாற்றுகிறது. அது அப்படியே ரத்தக் குழலில் போனால், கந்தசாமி கோமா வந்து விழுந்துவிடுவான். அதனால் நான் அதனை கிளைகோஜென்னாக மாற்றிச் சேமித்து வைத்துக் கொண்டு தேவையான போது குளுகோஸாக ஆக்கித்தந்து கொண்டிருக்கிறேன்.

இதற்காகவே நான் ஒய்ச்சல் ஒழிவில்லாமல் பச்சை நிறப் பித்த நீரையும் (BILI VERDIN) சிவப்பு நிறப் பித்த

FREE E- BOOKS , www.thamizham.net.,




உலகத் தங்கச் சந்தை அண்மையில் நடத்திய கணக்கீட்டின்படி உலகம் முழுவதும் தனியாரின் கைகளில் உள்ள தங்கத்தின் அளவு 11,300 டன்கள். இதில் அமெரிக்காவில் உள்ள தனியார் கையிருப்பு 1213 டன்கள். பிரான்சில் 1500 டன்கள். மேற்கு ஜெர்மனி, இங்கிலாந்து, மற்றும் சுவிட்சர்லாந்தில் தனியார் கைகளிலுள்ள தங்கம் 1500டன்கள் முதல் 2000 டன்கள் வரை.

ஆனால் இந்தியாவில் மட்டும் தனியார் கைகளிலுள்ள தங்கத்தின் அளவு 4000 டன்களைத் தாண்டி விட்டது. இந்தியா ஏழை நாடா? இல்லை தங்கச் சுரங்கமா?

நீரையும் (BILI RUBIN) சுரந்து கொண்டே இருக்கிறேன். எனக்கும் நோய் வருவதுண்டு.

என் நோய்களுக்குக் காரணம் இரண்டே இரண்டு தான். ஒன்று குறைவான ஒழுங்கற்ற உணவு. மற்றொன்றுகுடி, மதுபானவகைகள்.

என்னைச் சரியாகப் பராமரிக்கச் சில வழிவகைகள் இருக்கின்றன. குடி மதுபானம், புகையை தவிர்க்க வேண்டும். சீரான உணவு கொள்ள வேண்டும். உடம்பில் கொழுப்புச் சதை போடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தனுராசனம், பச்சிமோத்தாசனம், யோக முத்ரா போன்ற யோகாசனங்களைச் செய்தால் நான் நன்கு ஆரோக்யமாக இருப்பேன். மாதம் ஒருமுறை கீழாநெல்லிச் சாற்றை மருத்துவர் அறிவுரைப்படி பருக வேண்டும். கந்தசாமி மஞ்சள் காமாலை, ரத்தசோகைவராமல் வாழ வேண்டுமானால் என்னைக் கொஞ்சம் நினைவு கூர்ந்து நெறிப்படி வாழ வேண்டும்.

—சுட்டி பாரதி.

(அடுத்து : தங்கப்பனின் தைராய்டு)

FREE E- BOOKS , www.thamizham.net.,






"இன்றைய இளைய தலைமுறையின்
எழுச்சி எழுத்தாளரின்
புரட்சி படைப்பு" 6-00

| | |
|---|---|
| ஓர் இந்தியக் கனவு — கோமல் சுவாமிநாதன் | 6-00 |
| சிறகு முளைக்காத ஒரு பறவை — டி. எஸ். ரவீந்திரதாஸ் | 7-25 |
| உழைப்பாளரும் உரிமைப் போரும் — கல்பாக்கம் தமிழ்மணி | 6.00 |
| புன்னியில் மலர்ந்த பூக்கள் — என். ஆர். தாசன் | 5.00 |

**மயிலவன் பதிப்பகம்**

7, எம். கே. அம்மன் கோயில் தெரு,
சென்னை-600 004.

P.U.C/+2 தேறியவர்கள் அங்கீகரிக்கப்பட்ட BA / B.Com., பிரைவேட்டாக எழுத எளிய தபால் மூலம் பயிற்சி-விண்ணப்ப விளக்கம் பெற 3×30 ஸ்டாம்புடன் எழுதவும்.
EUROPEAA INSTITUTE, HILL GROVE, COONOOR-643 102.

சென்னையில் உங்களின் நம்பகம் வாய்ந்த பிரதிநிதியாய் செயல்பட விரும்புகிறோம். ஆலோசனைக் கட்டணம் ரூ 5/ உடன் உங்களுக்கு செய்ய வேண்டிய பணிகளின் விவரத்தை தெரிவிக்க வேண்டிய முகவரி:
மைதிலி மோகன், 27—பி திருவள்ளுவர் தெரு, இராமபுரம்
அம்பத்தூர், சென்னை-600 053.

இயேசு வரமாட்டார் (4.80); டி. ஜீ. எஸ், தினகரன் ஒரு பகல் கொள்ளைக்காரர் (1.00), தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் (1.00), அஞ்சல் செலவு இலவசம்.
பாலன சகோதரர்கள், புழல், சென்னை-600066.


FREE E- BOOKS , www.thamizham.net.,

**சுட்டி சந்தா விபரம்:**

- சுட்டி ஒவ்வொரு மாதமும் தவறாமல் முதல் தேதி வெளிவருகிறது.
- 12 இதழ்கள் அஞ்சலில் பெற சந்தா ரூ 5.00 மட்டுமே.
- எல்லாத் தொடர்புகளுக்கும்: ஆசிரியர் குழு, 'சுட்டி' 1494, அண்ணா நகர், சென்னை-600 040

**சுட்டி முன் இதழ்கள்:**

இதழ் எண்கள் 1 முதல் 8, 10, 11, 14, 16, 17, 19, 21, 22, 26 தவிர பிற இதழ்கள் யாவும் கிடைக்கும். பெற விரும்புவோர் இதழுக்கு 35 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பண விடை (M.O.) அனுப்பினால் எங்கள் செலவில் அவை உங்களை அடையும்.

**சுட்டி விற்பனையாளர்கள்:**

சுட்டி இன்னும் விற்பனையாகாத எல்லா இடங்களிலும் தேவை. எளிய விதிமுறைகள், தரமான கமிஷன் சுட்டியின் கொள்கைகளில் ஆர்வம் கொண்ட வாசகர்களுக்கு முன்னுரிமையுண்டு.

**சுட்டி இலவசம்:**

சுட்டியைப் படிக்காத நண்பர்கள் இருப்பின் அவர்களுக்குச் சுட்டியை எங்கள் செலவில் இலவசமாக அறிமுகப்படுத்தலாமே சுட்டியை நிச்சயம் வரவேற்கக் கூடியவர் எனில், அவர் முகவரியை தாருங்கள். உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் அவருக்குக் கிடைக்கச் செய்கிறோம்.

ஒருவர் எவ்வளவு நண்பர்களின் முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.

**சுட்டியில் விளம்பரம்:**

செய்து பயனடையுங்களேன். மாதந்தோறும் பல்லாயிரக்கணக்கான விழிப்பான வாசகர்கள் சுட்டியைப் பார்க்கிறார்கள்; பறிமாறுகிறார்கள்; விவாதிக்கிறார்கள். பலரும் பாதுகாக்கிறார்கள் நல்ல விளம்பரங்களுக்கு உரிய பத்திரிகை சுட்டி!

சுட்டியில் மலிவு வரி விளம்பரமும் செய்யலாம். வரி விளம்பரங்களுக்குக் கட்டணம் வரிக்கு ரூ5 -மட்டுமே.

✱ மது, சிகரெட்டு, பெண்களைப் போகப் பொருளாகக் காட்டி விற்பனை செய்யும் கவர்ச்சி விளம்பரங்கள் போன்றவை சுட்டியின் வெளியிடுவதற்கில்லை.

**சுட்டி தாமதமாகக் கிடைக்கிறது அல்லது வரவில்லை என்பவர்கள் கவனிக்க:**

சென்ற இதழ் மே 30-ஆம் தேதி உரிய நேரத்தில் தவறாமல் அஞ்சலில் அனுப்பியும் பல சந்தாதாரர்களுக்கு ஜூன் 8-ஆம் தேதிக்குப் பிறகே கிடைத்திருக்கிறது. இதுபற்றி அஞ்சல் துறை உரிய அதிகாரிகளிடம் நேரிலேயே புகார் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இனி இத்தாமதம் தவிர்க்கப்பட ஆவன செய்வதாக வாக்குறுதி தந்தார்கள்.

ஒவ்வொரு மாதமும் 1-ஆம் தேதி உங்களுக்குக் கிடைக்கும்படி இதழ் அனுப்பப்படுகிறது. மாதம் 10-ஆம் தேதிக்குள் இதழ் கிடைக்கவில்லையெனில் அஞ்சலில் தவறி இருக்கக்கூடும். கடிதம் எழுதினால் மீண்டும் அனுப்பப்படும். இதழ் கிடைக்காதது குறித்து 10-ஆம் தேதிக்குப்பின் எழுதப்படும் கடிதங்களே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

## "கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்" -

| | |
|---|---|
| பெண்களுக்கு நாகரிகத் தையல் | 5-50 |
| ஆண்களுக்கு டெய்லரிங் | 5-75 |
| செல்வம் குவிய சிறு தொழில்கள் | 6-00 |

**சங்கீத வாணி**

91, வி. எம். தெரு,
சென்னை-600 004

## "ரங்கா டைப் பௌண்ட்ரி"

- போஸ்டர் அச்செழுத்துக்கள்.
- எல்லா வித, எல்லா மொழி ஈய எழுத்துக்கள்.
- அச்சக உபகரணங்கள்.
- புது அச்சகம் தொடங்க நாணயமான வழிகாட்டுபவர்கள்.

அலுவலகம்: 78, ஹண்டர்ஸ் சாலை, வேப்பேரி, சென்னை-112.
தொழிலகம்: 38, குட்டி செட்டி தெரு, பெருமாள்பேட்டை, சென்னை-7.
தொலை பேசி: 37999, 664293

## என்ன ஆச்சரியம்!

**உங்கள் வீடுகளுக்கு வர 20 சித்த மருத்துவர்கள் காத்திருக்கிறார்கள்!**
**உங்கள் அழைப்பை எதிர்பார்த்திருக்கிறார்கள்!**

ஆம்! எந்த நோயையும் இருந்த இடம் தெரியாமல் விரட்டி அடிக்கும் 20 சித்த மருத்துவ நூல்களின் அணிவகுப்பைத்தான் சொல்கிறோம். வைத்தியச் சித்தர் கே. எஸ். லட்சுமணன் உருவாக்கியவை. பழம் பெரும் ஏடுகள் பலவற்றை ஆராய்ந்து பல நூல்களோடு ஒப்புநோக்கி, புத்தகப் பதிப்பு வித்தகர் புலவர் நாகசண்முகம் பதிப்பித்தவை. பாருங்களேன் அவற்றின் பட்டியலை.

1. தேனின் மருத்துவ குணங்கள் 2. நோய் நீக்கும் கீரைகள் 3. நோய் நீக்கும் பழங்கள் 4. நோய் நீக்கும் பூக்கள் 5. எலுமிச்சை வைத்தியம் 6. வெங்காய வைத்தியம் 7. வெள்ளைப் பூண்டு வைத்தியம் 8. வைட்டமின் காய்கறிகள் 9. தாதுவிருத்திக்குத் தன்னிகரற்ற மருந்துகள் 10. தலைவலி வயிற்றுவலி நீங்கத் தன்னிகரற்ற மருந்துகள் 11. இருமல் ஜலதோஷ நிவாரண மருந்துகள் 12. சருமரோக நிவாரண மருந்துகள் 13. மூல ரோக நிவாரண மருந்துகள் 14. வாயுத் தொல்லை நீங்க வகையான மருந்துகள் 15. விஷங்களை நீக்கும் வீரிய மருந்துகள் 16. கர்ப்பிணிகளுக்குக் கண் கண்ட மருந்துகள் 17. குழந்தை நோய்களும் மருந்துகளும் 18. பல நோய் மருந்துகள் 19. மாமிச உணவின் மருத்துவ குணங்கள் 20. தொந்தியைக் கரைப்பது எப்படி

நூல் ஒவ்வொன்றின் விலை ரூ. 3.00

தேவையான நூல்களை வி. பி. பியில் பெற எழுதுங்கள். இருபது நூல்களுக்கும் ரூ. 60 முன்பணம் அனுப்புவோருக்கு தபால் செலவு இலவசம்

**தமிழ்நாடு பதிப்பகம்**

36/3 சரோஜினி தெரு, தியாகராய நகர், சென்னை 600 017


FREE E- BOOKS , www.thamizham.net.,

# வயிற்றுப் புண்தானே!

இனி கவலையே வேண்டாம்! மிக விரைவில் நிச்சய நிவாரணம் நிரந்தர சுகமடைய நேரிலும் கடித மூலமும் ஆலோசனை பெறலாம்.

முகவரி : ஞானோதய வைத்தியர்
DR. C. K மாணிக்க வாசகம்,
செலந்தம்பள்ளி P.O . திருப்பத்தூர் TK (N A) PIN : 635653

சென்னை முகாமில் சந்திக்க :

பிரதி சனி, ஞாயிறு காலை 8 முதல் பிற்பகல் 1 மணி வரை
இடம் : மீனாட்சிக் கல்யாண மண்டபம்.
186, புரசவாக்கம் ஹைரோடு, சென்னை-10 போன் : 666430.


## சு. சமுத்திரத்தின்
## சமுகப்பார்வைமிக்க நூல்கள்

| | |
|---|---|
| சமுத்திரம் கதைகள் | 7-25 |
| இல்லந்தோறும் இதயங்கள் | 12-00 |
| காகித உறவு | 5-75 |
| ஒரு சத்தியத்தின் அழுகை | 6-00 |
| வளர்ப்பு மகள் | 7-00 |
| வேரில் பழுத்த பலா | 12-00 |
| உயரத்தின் தாழ்வுகள் | 6-50 |
| நெருப்புத் தடயங்கள் | 18-00 |
| புதிய திரிபுரங்கள் | 8-25 |
| ஊருக்குள் ஒரு புரட்சி (பரிசு பெற்றது) | 9-00 |

## மணிவாசகர் நூலகம்

புத்தகம் வெளியிடுவோர். 89, லிங்கிச் செட்டித் தெரு.
சென்னை-600 001.
போன் : 512996


FREE E- BOOKS , www.thamizham.net.,





ஆசிரியர்: நிர்மலா சுந்தர். வெளியிடுபவர்: கி. ராமச்சந்திரன், 1494, அண்ணா-நகர், சென்னை-40. அச்சிடுவோர்: J.S. கிட்ராஜ் ஷா, இருஷா பிரிண்டர்ஸ், 96, சாமி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002

FREE E- BOOKS , www.thamizham.net.,

[illegible] 1984 Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment Licence No. TN/MS(N)WPP-50

http://www.thamizham.net
FREE E-BOOKS (TAMIL)



# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.

FREE E- BOOKS , www.thamizham.net.,